செ.வெ.எண். 04/ஜூன் தேதி : 02.06.2016

# பத்திரிக்கை செய்தி

## தருமபுரி மாவட்டம், 2016-17ம் கல்வியாண்டு மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா பாடப்புத்தகங்கள், சீருடைகள், புத்தகப்பைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2016-17-ம் கல்வியாண்டில் 1 முதல் 12-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவியருக்கு பாடப்புத்தகங்களும், 1 முதல் 10-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவியருக்கு நோட்டுபுத்தகங்களும், 1 முதல் 8-ம் வகுப்பு படிக்கும் மாணவ, மாணவியருக்கு சீருடைகளை சென்னை தலைமைச் செயலகத்தில் வழங்கி திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் இலக்கியம்பட்டி அரசு மகளிர் உயர் நிலைப்பள்ளியில் மாணவிகளுக்கு பாடப்புத்தகங்கள், சீருடைகள் மற்றும் புத்தகப்பைகளை வழங்கி மாணவிகளிடையே தெரிவித்ததாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிகள் திறக்கப்பட்ட முதல் நாளிலேயே மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா பாடபுத்தகங்கள், நோட்டு புத்தகங்கள், சீருடைகள் வழங்க ஆணையிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் தருமபுரி மாவட்டத்தில் 1 இலட்சத்து 67 ஆயிரத்து 367 மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டது. 2015-16-ம் கல்வியாண்டில் 10-ம் வகுப்பு பொதுத் தேர்வில் கூடுதல் தேர்ச்சி சதவீதம் பெற்றுள்ளோம். வரும் கல்வியாண்டில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களின் தேர்ச்சி சதவீதம் உயர்த்தும் வகையில் பல்வேறு ஆய்வுக் கூட்டங்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிகள் திறந்த முதல் நாளிலேயே பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டதன் மூலம் மாணவ, மாணவியர்கள் நன்கு படிக்க முடியும். தற்போது முதல் காலாண்டு தேர்விற்கான பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து அடுத்த காலாண்டு புத்தகங்கள் என மூன்று நிலைகளில் பாடப்புத்தகங்கள் வழங்கப்படவுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் 6 முதல் 12-ம் வகுப்பு வரை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 83 ஆயிரத்து 936 மாணவ, மாணவியர்களுக்கும், 1 முதல் 5-ம் வகுப்பு வரை தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கும், 6 முதல் 8-ம் வகுப்பு வரை நடுநிலைப்பள்ளியில் பயிலும் 83 ஆயிரத்து 431 மாணவ, மாணவியர்களுக்கும் ஆக மொத்தம் 1 இலட்சத்து 67 ஆயிரத்து 367 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டது. மேலும் துவக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பயிலும் 83 ஆயிரத்து 431 மாணவ, மாணவியர்களுக்கு சீருடைகளும் வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள 14 வகையான விலையில்லா கல்வி உபகரணங்கள் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. வரும் கல்வியாண்டில் 100 சதவீதம் தேர்ச்சி இலக்கை எட்டுவதற்கு மாணவ, மாணவியர்கள் நல்ல முறையில் படிக்க வேண்டும். கல்வி சம்மந்தமாக தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை உடனுக்குடன் ஆசிரியர்களை கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் மாணவ, மாணவியர்கள் கல்வியில் சிறந்து விளங்கிட உறுதுணையாக இருக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. கே.பி. மகேஸ்வரி, மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. சுப்பரமணி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு. கோவிந்தசாமி, இலக்கியம்பட்டி அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு. பி. வெங்கடேசன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.